II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 158 of 2023**

Deposition of witness for the Plaintiff / PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Giridharan | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

முதல் பிரதிவாதி ராஜமன்னார் எனது தாய் மாமன் என்றால் சரிதான். அவர் ஆவடி கனரக வாகன நிறுவனத்தில் வேலை செய்தார். எனது தாத்தா ராமச்சந்திரன் எப்போது இறந்தார் என்று எனக்கு குறிப்பாக தேதி ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு 10 வயதிருந்தபோதே அவர் தந்தை இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா என்ன வேலை செய்து வந்தார் அவரது வருமானம் என்ன என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. என் தாயார் கைகுழந்தையாக இருக்கும்போதே அவர் இறந்துவிட்டார். என் தாத்தா இறந்த பிறகு எனது பாட்டி, அவரது பெற்றோர்கள், எனது தாயார், தாய் மாமன் மற்றும் பெரியம்மா ஆகியோர் ஒன்றாக தான் வசித்து வந்தனர் என்றால் என் தாய் மாமாவிற்கு திருமணம் ஆகும் வரை ஒன்றாக வசித்து வந்தனர். எனது பாட்டியின் பெற்றோரும் ஒன்றாக வசித்தனர் என்பறை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி தான் குடும்பத்தை நடத்தி வந்தார். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் சிறுவயதில் நான் நேரில் பார்த்திருக்கிறேன். பிறகு எனது தாயார், பெரியம்மா சொல்லி தெரியும்.

எனது பாட்டி தான் குடும்பத்தை நடத்தி வந்தார் என்பதை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பாக சொல்லவில்லை. அவர் சுதந்திரமாக வாழ்க்கையை நடத்தினார் என்று சொல்லியுள்ளேன். எனது வழக்குரையில் இந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு 1972 ம் ஆண்டு திருமணம் ஆனது. என் பெரியம்மாவிற்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் என் பெயரியம்மாவிற்கும் தாய் மாமாவிற்கும் ஒரே நாளில் தான் திருமணம் ஆனது. என் பெரியம்மாவிற்கு திருமணம் ஆன போது எனதுதாத்தா உயிருடன் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. என் அம்மாவிற்கு திருமணம் ஆனபோது என் தாத்தா உயிருடன் இருந்தார். (பிறகு சாட்சி தாத்தா என்று தனது பாட்டியின் தந்தையை சொன்னதாக சொல்கிறார்) எனது தாய் மாமா எந்த ஆண்டு வேலைக்கு சேர்ந்தார் என்று எனக்கு தெரியாது. எனது பாட்டி ஆதிலட்சுமி அம்மாளுக்கு புரசை வாக்கத்தில் உள்ள வீட்டில் இருந்து வாடகை வருமானம் வந்தது. மேட்டுபாளையத்தில் உள்ள நிலத்தில் இருந்தும் வருமானம் வந்தது. அவ்வாறு வருமானம் வந்ததை காட்ட ஆவணம் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. என் பாட்டி இறந்த பிறகு வாதி பிரதிவாதிகளுக்கு இடையே உறவு சுமுகமாக இல்லை. இந்நிலையில் 2008 ல் என் பாட்டி இறந்த பிறகு ஏன் உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் 2013 ம் ஆண்டு வரை எனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. என் தாயார் இறந்த பிறகாவது நாங்கள் பாக பிரிவினை கோரி உடனடியாக வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் 2015 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம். அதனை பற்றி எனது வழக்குரையில் ஏன் சொல்லவில்லை என்றால் எனது தாய் மாமா சொத்து தருவதாக ஒத்துக்கொண்டதால் சொல்லவில்லை. 2015 ல்

அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகு நாங்கள்  பாகபிரிவினை பற்றி பேசினோம்.
(இந்நிலையில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகொளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)